

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 08:17 - Last Updated Saturday, 15 June 2019 20:12

(ஒரு தாயின் நிகழ்காலத் துடிப்பும்,வருங்கால எதிர்பார்ப்பும்)

1.
கட்டிய கணவர்தம்,
மட்டிலா அன்பினால்,
கட்டிப் பொன் : கனியைப் பெற்றேனே ! – வாரிக்
கட்டியே முத்தம் இட்டேனே ! – சிறு
தொட்டிலில் போட்டவன்,
தூங்கிடும் போதிலே,
தூய்மையாம் தெய்வம் கண்டேனே ! – ஒரு
தாய்மையின் உய்வில் நின்றேனே !

2.

எட்டியே பிடித்துமார்,
பற்றியே முகத்தினால்,
முட்டியே பருகக்கண்டேனே ! – முகம்
மோதியே மகிழக்கண்டேனே ! - தேனே
சொட்டென வாயினால்,
விட்டிடும் வீணிரால்,
சட்டையும் நனையக்கண்டேனே ! – மனம்
சாலவே குளிரக்கண்டேனே !

1 / 3

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 08:17 - Last Updated Saturday, 15 June 2019 20:12

3.
தத்தியே தவழ்ந்து பின்,
தளர்நடை போட்டு என்,
தாழ்தனைச் சுற்றிவந் தான் - தன்
தாயெனும் உரிமைகண் டான்! – நான்
சுத்திய சேலையில்,
தொத்தியே பாய்ந்தவன்,
முத்தென வாய்திறந் தான்!- தன்
சொத்தெனத் தமிழ் உதிர்ந் தான்!

4.
பள்ளியில் கற்றிடப்,
பத்திரம் பண்ணிநான்,
பாசமாய் அனுப்பிவைத் தேன்! – அவன்
படிப்பிலே உயிரைவைத் தேன்! – எந்தக்
கள்ளியின் நெஞ்சிலும்,
பள்ளிகொள்ளா தவன்,
கல்வியில் கவனம்வைத் தான் - கலையில்
கவுரவப் பட்டம்பெற் றான்!

5.
ஓர்மகள் இல்லையே,
எனும்குறை தீர்த்திட,
மருமகள் வரவும்வேண் டும்! – மகன்
மாலையை இடவும்வேண் டும்! – நான்
அருமையாய் கொஞ்சிட,
அன்பான பேரனை,
உரிமையாய் தரவும்வேண் டும்! – மனம்
பெருமையில் நிலவவேண் டும்!

6.

வெள்ளிகள் நடுவிலோர்,
வெண்மதி போலவன்,
வெற்றிகள் காணவேண் டும்! – கண்டு
பெற்றநான் மகிழவேண் டும்! – உயிர்
கொள்ளிடக் கூற்றுவன்,
துள்ளியே வந்தபின்,
கொள்ளியை வைத்தால்போ தும்! – நெஞ்சில்
கோவிலாய்க் கொண்டால்போ தும்!

2 / 3

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 08:17 - Last Updated Saturday, 15 June 2019 20:12

bairaabaarath@gmail.com

3 / 3